# டி.எம்.எஸ்., – வண்ணாரப்பேட்டை: ஞாயிறு முதல் மெட்ரோ ரயில் சேவை

சென்னை, பிப். 8–

திருப்பூருக்கு, 10ம் தேதி வரும், பிரதமர் மோடி, சென்னை, டி.எம்.எஸ்., – வண்ணாரப்பேட்டை இடையேயான, மெட்ரோ ரயில் சேவையை, வீடியோ கான்பரன்ஸ் வாயிலாக துவக்கி வைக்கிறார்.

சென்னையில், விமான நிலையத்தில் இருந்து சென்ட்ரலுக்கும், தேனாம் பேட்டை, டி.எம். எஸ்.,சுக்கும், மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

டி.எம்.எஸ்., – வண்ணா ரப்பேட்டை இடையே, 10 கி.மீ., மெட்ரோ ரயில் பாதை பணி முடிந்து, சோதனை ரயில் இயக்கப்பட்டு வருகிறது.

**பிரதமர் மோடி**

இப்பாதையில், 10ம் தேதி ரயில் போக்குவரத்து துவக்கப்படுகிறது. பிரதமர் மோடி, அன்றைய தினம், திருப்பூர் வருகிறார்.

புதிய திட்டங்கள் துவக்க விழாவில் பங் கேற்கும் அவர், வீடியோ கான்பரன்ஸ் வாயிலாக, சென்னை, டி.எம்.எஸ்., – வண்ணாரப்பேட்டை இடையே, மெட்ரோ ரயில் சேவையையும் துவக்கி வைக்கிறார்.

இதற்கான விழா, சென்னை சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலை யத்தில் நடக்கிறது. முதல்



ரயில், சென்ட்ரலில் இருந்து, வண்ணாரப்பேட் டைக்கு செல்கிறது. அங்கி ருந்து, டி.எம்.எஸ்.,சுக்கு இயக்கப்படுகிறது.

திருப்பூரில் நடக்கும் விழாவில், முதல்வர், இ.பி. எஸ்.,சும் துணை முதல் வர் பன்னீர்செல்வமும் பங்கேற்கின்றனர்.

சென்னை சென்ட்ரலில் நடக்கும் விழாவில், மத் திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் ஹர்தீப் சிங்புரி, தமிழக தொழில் துறை அமைச்சர், எம். சி.சம்பத் மற்றும் அதிகாரி கள் பங்கேற்கின்றனர்.

சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையம் மற்றும் விழா மேடை அமைக்கும் இடத்தை, தமிழக அரசின் கூடுதல் தலைமை செயலர் சோமநாதன் நேற்று பார் வையிட்டார். சென்ட்ரலில் இருந்து, வண்ணாரப்பேட் டைக்கு இயக்கப்பட்ட முன்னோட்ட ரயிலையும் அவர் பார்த்தார்.